உ

ஸ்ரீ காமாட்சியம்மன் துணை







## கரூர் - பஞ்சமாதேவி

# ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோவில்
# கும்பாபிஷேக 23வது - ஆண்டு விழா
# கோ பூஜை, ராஜ மாதங்கி குபேர லக்ஷ்மி
# யாக விழா மற்றும் சுமங்கலி பூஜை,
# விழா அழைப்பிதழ்

**20.08.2026 மற்றும் 21.08.2026 - வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை**

ஓம் மாதா மஹா சைலம்
மஹஸ்த்தா துபிதா மஹம்,
காரணம் ஜகதாம் வந்தே,
கண்டாது பரிவாரணம்.

பேரன்புடைய பக்த கோடிகளே !

அங்கிங்கெனாதபடி நீக்கமற நிறைந்து கருணையான கண்களினால் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ காமாட்சி அம்மன் குடிகொண்டிருக்கும் 500 ஆண்டுகளுக்கு மேல் பழமையான கரூர் – பஞ்சமாதேவி அமராவதி ஆற்றின் வடகரையில் எழுந்தருளியுள்ள பெருமைமிகு ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயமானது மிகவும் சிதிலமடைந்து ஏறக்குறைய மண்மேடாக ஆக கூடிய நிலையில் இருந்தது.

நல்இதயம் படைத்த சான்றோர்கள், ஆன்றோர்கள், குடிப்பாட்டுக்காரர்களின் பேருதவியுடன் ஆலயம் 100 % முழுமையாக புனரமைக்கப்பட்டதோடு நடைபாதையாக 1 அடி அகலமே இருந்த வழித்தடத்தை 20 அடி தார்சாலையாக மாற்றி பக்தர்கள் எளிதாக வாகனங்களில் வந்துசெல்ல தகுந்த அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டு கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

ஆகம சாஸ்த்திர முறைப்படி 12 ஆண்டுகள் கடந்து கோவிலின் முன்புறம் மிகப்பெரிய மண்டபம் அமைத்து, பரிவாரசுவாமிகளுக்கு கோபுரம் அமைத்து, அனைத்து வசதிகளுடன் திருமண மண்டபமும், முன்புறம் முழுமையாக கான்கிரீட் தளமும் அமைத்து மிக பிரம்மாண்டமான அளவில் 2016 ம் வருடம் இரண்டாவது மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

'ஆலயம்' என்பது புனரமைக்கப்படுவதோடு இல்லாமல் சாஸ்த்திர முறைப்படி 3 கால பூஜை நிகழ வேண்டும் என்பது மஹா சுவாமிகளின் விருப்பமாகும். மாமுனிவர்களின் எண்ணத்திற்கேற்ப அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயத்தில் கடந்த 23 ஆண்டுகளாக மூன்று கால பூஜை, அன்னதானத்துடன் பௌர்ணமி பூஜை, நவராத்திரி பூஜை, சிவராத்திரி பூஜை, நவக்கிரஹ வழிபாடு என மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருவதோடு, முழுமையான சுத்தத்துடன் ஆலயம் விளங்கி வருகின்றது.

வருகின்ற சுபஸ்ரீ நிகழும் மங்களகரமான பராபவ வருடம் ஆவணி மாதம் 3-ம் தேதி மற்றும் 4-ம் தேதி (20.08.2026 மற்றும் 21.08.2026) வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை நிகழ்ச்சி நிரல்படி கோ பூஜை, ராஜ மாதங்கி குபேர லக்ஷ்மி யாக விழா, சுமங்கலி பூஜை, மற்றும் ஸம்வத்ஸராபிஷேகம் எனும் 23 -ம் ஆண்டு விழா வழக்கமான நாதஸ்வரம், தவில் இசையுடன், பாமாலை, பூமாலை இசை மழையுடன் விசேஷ ஹோமங்கள், ஹோமங்கள், மஹா அபிஷேகங்கள் மற்றும் மஹா தீபாராதனை சிறப்பாக நடைபெற உள்ளது.

**கோ பூஜை :** நாடும் ஊரும் பக்தர்களும் மேன்மையடைய கோ பூஜை நடைபெறும்.

**சுமங்கலி பூஜை :** சுமங்கலி பூஜை நமது ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பூஜையில் நேரில் கலந்துகொள்ளும் சுமங்கலிகளுக்கு மங்கள பொருட்கள் வழங்கப்படும். இப்பூஜைக்கான செலவுத்தொகை ரூ. **250 /-** மட்டுமே. (முதலில் வரும் 151 நபர்களுக்கு மட்டும் டோக்கன் வழங்கப்படும்.)

**ராஜ மாதங்கி குபேர லக்ஷ்மி ஹோம பலன்கள் :** ராஜ மாதங்கி குபேர லக்ஷ்மி யாகம் செய்வதால் தன வசீகரமும், லட்சுமி தேவியின் தலைவியாக விளங்குகின்ற குபேர லக்ஷ்மி செல்வ செழிப்பை வாரி வழங்கியும், வம்ச விருத்தியையும், ரண, ருணம், ரோகம் இடர்பாடுகளை நீக்கவும், கல்வி அறிவை மேம்படவும், தொழில் மேன்மை அடையவும் இந்த யாகம் சிறப்பாக நடைபெறும்.

**கோவில் மேம்பாட்டுப் பணி :** நமது நீண்ட கால கனவான அம்பாளுக்கு ஒரு தேர் செய்யும் திருப்பணிக்காக கோவில் தெனபுறம் சுற்றுச்சுவர் அகலப்படுத்தப்பட்டது. அதே போல் கோவிலின் வடபுறம் அகலப்படுத்த வேண்டிய ஆயத்த பணிகள் நடைபெற உள்ளது. அனைத்து சுற்றுப்பகுதியில் 5 அடி தடம் உருவாக்கிய பிறகு தேர் செய்யும் பணி துவங்க உள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக நவீன கண்காணிப்பு கேமரா முழுமையாக பழுது நீக்கி பொருத்தப்பட உள்ளது.

நிகழ்ச்சி நிரல்

| **நாள்** | **நேரம்** | **நிகழ்ச்சி விபரம்** |
|---|---|---|
| பராபவ வருடம்<br>ஆவணி மாதம்<br>3 – ஆம் நாள்<br>(20.08.2026)<br>வியாழக்கிழமை | மாலை 6.00<br>மணிக்குமேல் இரவு<br>8.00 மணிக்குள் | அனுஞ்ஞை விக்னேஷ்வரபூஜை, மஹா சங்கல்பம்,<br>புண்யாகம், கலச ஸ்தாபனம், வேத பாராயணம்,<br>மஹா தீபாரதனை மற்றும்<br>பிரசாதம் வழங்குதல் – **அன்னதானம்.** |
| ஆவணி மாதம்<br>4 – ஆம் நாள்<br>(21.08.2026)<br>வெள்ளிக்கிழமை | காலை 7.00<br>மணிக்குமேல் 12.00<br>மணிக்குள் | மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம்,<br>**"ராஜ மாதங்கி குபேர லக்ஷ்மி ஹோமம்"**<br>கோ பூஜை, சுமங்கலி பூஜை, திரவியாகுதி பூஜைகள் |
| | மதியம் 12.00<br>மணிக்குமேல் 1.00<br>மணிக்குள் | மஹா பூர்ணாஹுதி, மஹா அபிஷேகம்,<br>கலச அபிஷேகம், மஹா தீபாரதனை,<br>பிரசாதம் வழங்குதல்.<br>**சிறப்பு அன்னதானம்** |

ராஜ மாதங்கி குபேர லக்ஷ்மி யாகத்தில் கலந்துகொள்ள ரூபாய் 5,000/- நிதியுதவி வழங்கி அம்மன் அருள்பெற வேண்டுகிறோம்.

அது சமயம் குடிப்பாட்டுக்காரர்களும், பக்தகோடிகளும் தங்களால் இயன்ற நன்கொடைகளை அளித்து அம்மன் அருள்பெற வேண்டுகிறோம். மேலும் பக்தகோடிகள் தவறாது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ காமாட்சி அம்மன் மற்றும் அனைத்து பரிவார சுவாமிகளின் அருளைப்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**நிதி அளிக்கும் முறைகள் :**

கோவில் பூசாரி வசம் நன்கொடை கொடுத்து கோவிலில் உள்ள நோட்டு புத்தகத்தில் எழுதி கையொப்பம் செய்யவும். இரசீது அனுப்பிவைக்கப்படும்.

DD எடுக்க வேண்டிய முறை **" Sri Kamakshi Amman Temple " Payable at Karur.**

நேரடியாக **Bank of Baroda** வங்கியில் செலுத்தலாம் / **Online** மூலமாகவும் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் : **Bank of Baroda, Karur City.** வங்கி கணக்கு எண் : **83610200003061**

கணக்கின் பெயர் : **Sri Kamakshi Amman Temple** **IFSC Code : BARB0VJKARU - Fifth Letter ZERO**

**குறிப்பு :**

வங்கியில் பணம் செலுத்திய பிறகு 96559 56440 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். இரசீது உடனடியாக அனுப்பிவைக்கப்படும்.

கரூர் " சிவஆகமவிசாரத் "
" வேதப்ரம்மா " " சிவாச்சார்ய திலகம் " " சிவஆகமபூஷணம் "
சிவஸ்ரீ M. **முரளி சிவாச்சாரியார்**
வேத சிவஆகம பாடசாலை முதல்வர், கரூர்.
செல் : 98430 60915

இப்படிக்கு
அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோவில் விழாக் குழுவின் சார்பாக
**எஸ். சிதம்பரம்,**
ஒருங்கிணைப்பாளர், பஞ்சமாதேவி, கரூர் – 639 004.
**98430 56440**
**E.mail : rtnchidambaram@gmail.com**

nanban